செ.வெ.எண்: 176 நாள்: 26.02.2020

**நகர்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான வரைவு வாக்குச்சாவடி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

நகர்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் வரைவு வாக்குச்சாவடி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நகர்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு இன்று 26.02.2020 அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் வரைவு வாக்குச்சாவடி பட்டியல் வெளியிடப்பட்டு, அந்தந்த நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்குச்சாவடி பட்டியல் தொடர்பாக ஆட்சேபணைகள், கருத்துகள் ஏதும் இருப்பின் அதனை பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் 02.03.2020ஆம் தேதிக்கு முன்னதாக அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வாக்காளர் பதிவு அலுவலர்களிடம் எழுத்து மூலமாக தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**